# பருவமழை காலத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான ஆயத்த நிலை ஏற்பாடுகள்

- சாகுபடி செய்யப்பட்ட பரப்பினை அடங்கல் மற்றும் இ - அடங்கலில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- நீர்பாசனம் மற்றும் உரமிடுதல் ஆகியவற்றை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.
- மரங்களை சுற்றி மண் அணைத்து பாதுகாப்பு கொடுக்கவும்.
- அறுவடைக்கு தயாராக இருக்கும் தோட்டங்களில் அறுவடை மேற்கொண்டும் கவாத்து செய்தும் மரத்தின் சுமையை குறைத்து காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்கவும்.
- கனமழை காரணமாக ஏற்படும் மழைநீர் தேக்கத்தை குறைக்க உபரி நீர் வடிந்த பின் நடவு/விதைப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.
- காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க காற்று வீசும் திசைக்கு எதிர்திசையில் குச்சிகளால் முட்டுகொடுத்து புதியதாக நடவு செய்த செடிகள் சாயாவண்ணம் பாதுகாக்கவும்.
- தோட்டக்கலைப் பயிர்களளை உடனடியாக பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.

## பயிர் வாரியாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்

### I. பல்லாண்டு பயிர்கள்

#### 1. தென்னை

- உரிய நேரத்தில் தேங்காய்/இளநீரை அறுவடை செய்தல் மூலம் காற்று மற்றும் புயலினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கலாம்.
- மரத்தின் கீழ் சுற்றில் உள்ள கனமான, பழைய மட்டைகளை வெட்டி அகற்றுவது மூலம் மரத்தின் சுமையை குறைத்து காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்கவும்.

- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்தல் (mounding) மூலம் வேர் பகுதிகளை பாதுகாக்கவும் நீர் தேக்கம் ஏற்படாமலும் தடுக்கலாம்.
- தற்காலிகமாக நீர் மற்றும் உரமிடுவதை தவிர்த்து , மழைக்காலத்தில் ஏற்படும் வேர் அழுகல் நோய் மற்றும் ஊட்டச்சத்து இழப்பை தவிர்க்கலாம்..
- மழைநீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கம் மூலம் வேர் அழுகல் நோயை தவிர்க்கலாம்

2. மா

- காய்ந்த மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றிட வேண்டும்.
- நல்ல காற்றோட்டம் அமையும் பொருட்டு கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.
- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.
- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும்.
- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளால் கட்ட வேண்டும்.

3. **கொய்யா/மாதுளை**

- கவாத்து செய்திட வேண்டும்,
- சிறிய செடிகள் காள்ளினால் பாதிக்கா வண்ணம் குச்சிகளால் கட்ட வேண்டும்.
- பூஞ்சாண நோய்களைத் தடுக்க நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும்.
- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.

4. **திராட்சை**

- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- திராட்சைக்கொடியில் போர்டோப் பசையினைப் பூச வேண்டும்.
- அதிகப்படியான இலைத்தளைகளை கவாத்து செய்தல் வேண்டும்.
- திராட்சைக் கொடிகளை பந்தல் அமைப்பில் நன்கு கட்ட வேண்டும்.

### 5. மிளகு

- பூஞ்சாண நோய்களைத் தடுக்க சூடோமோனாஸ் தெளிக்க வேண்டும்.
- டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லிகளை நிலத்தில் தெளிக்க வேண்டும்.
- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நல்லமிளகு கொடிகளை சரியாக கட்டிவிட வேண்டும்.
- தாங்குச் செடிகளில் நிழலினை ஒழுங்குப்படுத்த கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.

6. **கிராம்பு/ஜாதிக்காய்**

- பூஞ்சாண நோய்களைத் தடுக்க சூடோமோனாஸ் தெளிக்க வேண்டும்.
- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- காய்ந்தபோன இலைகள் மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றிட வேண்டும்.
- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.
- நிழலினை ஒழுங்குப்படுத்த கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.
- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளால் கட்ட வேண்டும்.

**7. கொக்கோ**

- காய்ந்தபோன இலைகள் மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றிட வேண்டும்.
- அதிகப்படியான இலைத்தளைகளை கவாத்து செய்தல் வேண்டும்.

- மரத்தின் தண்டுப்பகுதியில் போர்டோக்கலவைத் தெளிக்க வேண்டும்.
- முதிர்ந்த பழங்களை அறுவடை செய்ய வேண்டும்.
- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளால் கட்ட வேண்டும்.

8. ரப்பர்

- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளால் கயிற்றால் கட்ட வேண்டும்.
- செடியின் அடிப்பாகத்தை சுத்தம் செய்து உள்நோக்கி சாய்வு அமைத்து வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ரப்பர் பால் வடிக்கும் பகுதியில் பாதுகாப்பு பூச்சு பூச வேண்டும்.
- மழைப்பாதுகாப்பு கவசம் பயன்படுத்த வேண்டும்.

## II. வருடாந்திரப்பயிர்கள்

### 1. வாழை

- காற்றினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் கீழ்மட்ட இலைகளை அகற்றிவிட்டு மரத்தின் அடியில் மண் அணைத்தல் வேண்டும்.
- சவுக்கு அல்லது யூகலிப்டஸ் கம்புகளை ஊன்றுகோலாக பயன்படுத்த வேண்டும்.
- மரங்களை சுற்றிலும் சுத்தபடுத்தி நல்ல வடிகால் வசதி அமைக்க வேண்டும்.
- வாழைத்தார்களை முறையாக மூடிவைத்தல் வேண்டும்.
- 75ரூ-க்கு மேல் முதிர்ந்த தார்களை அறுவடை செய்தல் வேண்டும்.

### 2. காய்கறிகள்

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- தக்காளிக்கு ஊன்றுகோல் பயன்படுத்த வேண்டும்.
- நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும்.
- டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சாண உயிரியல் கொல்லியினை நிலத்தில் தெளிக்க வேண்டும்.

- சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லியினை இலையில் தெளிக்க வேண்டும்.
- காய்ந்தபோன இலைகளை அகற்றிட வேண்டும்.

**3. பந்தல் காய்கறிகள்**

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும்.
- டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சாண உயிரியல் கொல்லியினை நிலத்தில் தெளிக்க வேண்டும்.
- சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லியினை இலையில் தெளிக்க வேண்டும்.
- காய்ந்தபோன இலைகளை அகற்றிட வேண்டும்.

**4. மரவள்ளி**

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- செடியின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.

III. **பூக்கள்**

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்க வேண்டும்.
- டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சாண உயிரியல் கொல்லியினை நிலத்தில் தெளிக்க வேண்டும்.
- சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லியினை இலையில் தெளிக்க வேண்டும்.
- காய்ந்தபோன இலைகளை அகற்றிட வேண்டும்.

IV. **பசுமைக்குடில்**

- பசுமைக்குடிலின் அடிப்பாகத்தை பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கவும்.
- பசுமைக்குடிலின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பத்திரமாக மூடி உள்பகுதியில் காற்று உட்புகாமல் பாதுகாக்கவும்.

- அருகில் மரங்கள் இருப்பின் அதன் கிளைகளை கவாத்து செய்யவும்.
- பசுமைக்குடிலின் கட்டுமானத்தினுள் கிளிப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மாற்றவும்.

## V. நிழல்வலைக்குடில்

- கிழிந்து போன நிழல் வலைகளை தைத்து சரிசெய்யவும்
- நிழல்வலைக்குடிலின் அடிப்பாகம் பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.